Previous Date of examination :

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
TIRUVARUR.

# STC. No.201/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of witness for | : | **PW1** | Caste | : | |
| Name | : | ஜெகதீஸ்வரன் | Age | : | 34/2024 |
| Father's Name | : | கிருஷ்ணமூர்த்தி | Occupation | : | வசூல் மேலாளர், ஸ்ரீராம் பைனான்ஸ் |
| Village | : | திருவாரூர் | Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the **16th day of December 2024.**

( Accused absent. Petition u/s.355 BNSS filed and allowed)

**(இவ்வழக்கில் சி.ஆர்.எம். எண்.5180/2023-ல் வழக்கை கோப்பிற்கு எடுக்கவேண்டி கொடுக்கப்பட்ட நிரூபணவாக்குமூலத்தை முதல் விசாரணையாக எடுத்துக்கொள்ள மெமோ தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்படுகிறது.)**

**முதல் விசாரணை** :

இவ்வழக்கில் புகார்தாரர் நிறுவனத்தில் அதிகாரம் பெற்ற முகவர் மற்றும் வசூல் மேலாளர் ஆவேன். வழக்கு விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியும், எதிரி மீது காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எதிரியின் கடன் கணக்கு விபரத்தை தாக்கல் செய்கிறேன். ( **கடன் கணக்கு விபர அறிக்கை ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** எதிரி எங்களது நிறுவனத்திற்கு வழங்கிய 22.02.2023 ம் தேதியிட்ட **ரூ.2,10,259/-ற்**கான காசோலை அசலை தாக்கல் செய்கிறேன். ( காசோலை அசல் **ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**). 18.-03.2023 ம் தேதியிட்ட வங்கியால் கணக்கு முடிக்கப்பட்டதாக காரணம் காட்டப்பட்டு திருப்பப்பட்ட வங்கி குறிப்பாணை தாக்கல் செய்கிறேன். ( **வங்கி குறிப்பாணை ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** இது சம்பந்தமாக **22.03.2023** ம் தேதியன்று தொகை கேட்டு எங்களது நிறுவன வழக்கறிஞர்

மூலமாக எதிரிக்கு ஒரு அறிவிப்பு அனுப்பினேன். அதன் அலுவலக நகலை தாக்கல் செய்கிறேன். ( **அறிவிப்பு நகல் ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) எதிரிக்கு அறிவிப்பு சார்வு செய்யப்பட்டதை காட்டக்கூடிய அஞ்சல் துறை அறிக்கையை தாக்கல் செய்கிறேன். ( **அஞ்சல் துறை அறிக்கை ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). எங்களது நிறுவனத்தால் வழங்கப்பட்ட பொது அதிகார ஆவணத்தின் உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். ( **சிறப்பு அதிகார ஆவணம் உண்மை நகல் ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) எதிரி அவரது வங்கி கணக்கில் பணம் இல்லை என்று தெரிந்துக்கொண்டே மோசடியாக எங்களது நிறுவனத்திற்கு காசோலை கொடுத்து ஏமாற்றியதால் அவர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன். புகார்படி நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.**

**சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஏற்கப்பட்டது.**

**ஒம்/- S.விஜய் ஆனந்த்,**
**நீதித்துறை நடுவர்,**
**திருவாரூர்.**